**பாதஹேவாஹெட்ட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதஹேவாஹெட்ட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் பாதஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டு அலுவலர்களிடமிருந்து சுவீகரிக்கப்படாத ரூபா 128,700 ஆன கடன் மீதியொன்று, ஊழியர் கடன் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | 2021 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (ஆ) | கட்டிட பெறுமதி ரூபா 45,195,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் சரிசெய்கிறேன். | சரியாக கணகீடு செய்ய வேண்டியமை |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 9,527,450 ஆன 02 கணக்கு விடயங்களிற்குரிய ஆட்டவணை மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமையின் கீழ் அட்டவணைகள் தயாரிக்க தாமதித்ததாக அறிவிக்கிறேன். | கணக்கு விடயங்களிற்கான அட்டவணைகளை சரியாக தயாரித்துக் கொள்ளக் வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 42,543,078 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 29,451,639 ஆகும். வீதவரி மற்றும் குத்தகை, அனுமதிப்பத்திர வருமானம் அதிகரித்மை மற்றும் திருத்த மற்றும் பராமரிப்பு செலவு குறைந்தமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் ஏக்கர் வரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 4,777,727 ஆன வீதவரி மற்றும் ரூபா 1,275,580 ஆன ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டியமை |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 88 கடையறைகளிலிருந்து அறவிட வெண்டிய ரூபா 1,122,152 ஆன வாடகையை அறவிட வழக்கு தாக்கம் செய்திருந்த போதும், குறித்த தொகை அறவிடடிருக்காததுடன், 69 கடையறைகளிற்காக புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பநதம் கைச்சாதிடப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | நிலுவை பணம் அறவிடப்பட வேண்டியமை |
| (இ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 369,302 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 36,291,847 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அட்டவணை அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். | கிடைக்க வேண்டிய பணம் அறவிடப்பட வேண்டியமை |
| (ஈ) | ஏனைய வருமானம் | | |
| | 506 முச்சக்கர வண்டிகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,493,500 மற்றும் 07 தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து அறவிட வேண்டிய கட்டணத்தை கணக்கிட்டு, அறவிட்டிருக்வில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் வழங்கிய சட்ட ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | பெறவேண்டிய வருமானத்தை அறவிட வேண்டியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 05 ஆண்டு காலமொன்றை விஞ்சியிருந்த கூட்டுத் தொகை ரூபா 17,047,488 ஆன பெறவேண்டிய வீதவரி, முத்திரை கட்டணம் மற்றும் நீர் கட்டணம் அறவிட்டிருக்காததுடன், ஆண்டு 01 இற்கும் 05 இடையிலான கால வீச்சளவில் அறவிடாது நிலுவையாக நிலவிய ரூபா 291,038 ஆன வேலை கடன்கொடுனர் மீதியை தீர்த்திருக்கவில்லை. | அறவிட மற்றும் தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட மற்றும் கொடுப்பனவுகளை தீர்க்க வேண்டியமை |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆண்டு சபைக்கு ஒப்படைத்திடிருந்த சதுர அடி 6,928 அளவான தலாதுஓய பேரூந்து தரிப்பிடம் அமைந்துள்ள இடத்தில் காணப்படும் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்காது விளைவற்று காணப்பட்டது. | உடமை தொடர்பான பிரச்சனையொன்று இருப்பதுடன், அதனை தீர்த்துக் கொண்டதன் பின்னர் குத்தகை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சொத்துக்களிலிருந்து சரியாக வருமானம் அறவிட வேண்டியமை |

### 3.3 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கிதுல்முள்ள மேற்பகுதி பாளம் மீண்டும் நிர்மாணித்தல் வேலை - ரூபா 2,000,000 | | |
| | வேலைக்குரிய பாளத்தின் அடித்தளத்திற்காக பயன்படுத்திய கொன்கிரீடின் பொழிப்பு சக்தி (compressive strength) தரமற்றது என குறித்த பரிசோதனை அறிக்கை மூலம் உருதியாகி இருக்கையில், 2021 பெப்ரவரி 24 திகதி 18.37 கன மீட்டர் கொன்கிரீடிற்காக ரூபா 374,332 செலுத்தியிருந்தமையால், ரூபா 2,000,000 செலவில் நிர்மாணித்த பாளத்தின் எதிர்கால நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில பிரச்சினைக்குரிய நிலைமை காணப்பட்டது. | இவ் வேலையின் உத்தரவாத காலத்தை ஓராண்டு வரை பிற்போட நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கிறேன். | சரியான நியமத்துடன் கூடிய வகையில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டியமை |

(ஆ) மய்லபிடிய கந்துரட சதெல்ல Lot 13 காணிப் பகுதியை சுற்றி வேலியிடும் வேலை - ரூபா 798,616

---

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டின் பிரகாரம், அளவுத் திட்டத்திற்கு இணங்காத விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீளம் 154 மீட்டரான வேலிக்காக ரூபா 337,876 செலுத்தப்பட்டிருந்தது. | இவ் வேறுபாட்டினால் ஏற்பட்ட பணரீதியான வித்தியாசத்தை கணக்கிட நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கிறேன். | அளவுத் திட்டம் பிரகாரம் நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டியமை |